# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவி | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | கந்தசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 22,04,2024.

A1 & A2 present.

**முதல் விசாரணை;**

நான் சந்தியூரில் குடியிருக்கிறேன். நான் சேலம்– நாமக்கல் ரோட்டில் சந்தியூர் பிரிவில் சுமார் 10, 15 வருடமாக இளநீர் வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை 10.00 மணி அளவில் நான் எனது இளநீர் கடையில் இருந்தேன். அப்போது சந்தியூர் பிரிவு ரோட்டில் டம் என்று சத்தம் கேட்டது. நானும், இளநீர் கடையில் இளநீர் குடித்துக்கொண்டிருந்த 2,3 நபர்களும்

ஓடிப்போய் பார்த்தோம். ஒரு டிப்பர் லாரியும் ஜோதி பஸ்சும் மோதியிருந்தது. நிறைய பேர் அடிபட்டு கிடந்தார்கள். நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தேன். அதற்குள் ஹய்வே போலிசார் வந்துவிட்டார்கள். அவர்கள் 108 ஆம்புலன்ஸ் வந்த உடன் 2,3 வண்டியில் காயம்பட்டவர்களை அனுப்பி வைத்தார்கள். பஸ்சில் வந்த ஒரு பெண்ணும் 2 சக்கர வாகனத்தில் வந்த 2 பேரும் லாரியில் வந்த ஒருவரும் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் 3 பேர்கள் இறந்ததை பார்த்தேன். லாரியில் வந்த நபர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். பெரிய பெரிய காவல் துறை அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள். லாரியில் மணல் ஏற்றி வந்திருந்தார்கள். லாரியை ஓட்டி வந்தவரை எனக்கு அடையாளம் தெரியாது. பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனரையும் எனக்கு அடையாளம் தெரியாது.

1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.